விலை ரூபா 2-00

# முன்னணிச் செய்தி

இதழ் - 5 ஏப்ரல் 1985 பக்கங்கள் - 6

**மறுக்கிறோம்!**

நாங்கள் தமிழீழ விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் சக இயக்கங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகிறோம். ஆயினும் இதுவரை எந்த விடுதலை இயக்கத்துடனுவது எந்த வகையான கூட்டுக்களையும் நாம் அமைத்துக் கொள்ளவில்லை. நாம் இணைந்துள்ளதாக குறிப்பிட்டு பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளை மறுக்கிறோம்.

## கிழக்கில் அரச படைகள் வெறியாட்டம்!

# தமிழ்-முஸ்லிம் கலவரத்தை தூண்ட பேரினவாதிகள் சதி!

கிழக்குமாகாண தமிழ் முஸ்லீம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதில் சிங்கள பேரினவாதிகளும், இனவெறி அரசும் தொடர்ந்து திட்டமிட்டு செயல்பட்டு வந்துள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கிழக்குமாகாண மக்களின் ஆதரவு இல்லை என்ற பொய்ப்பிரச்சாரத்தையும் இந்த அரசு மேற்கொண்டு வந்துள்ளது. இதை வலுவூட்டும் விதத்திலே திட்டமிட்டு நடாத்தப்படும் ஒரு 'சதிச்செயலே' இன்று கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பில் காரைதீவு அக்கரைப்பற்று கிராமங்களில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலவரங்களின் பின்னணியில் அரசபடைகளும் சிங்கள பேரினவாத சக்திகளும் நின்று செயல்படுவது தெரியவந்துள்ளது. நிலைமையை அவதானிக்கதாழப் பறக்கும் ஹெலிகொப்ரர் விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப்பட்டுள்ளன. தமிழ்ப் பயங்கரவாதிகளினுல் முஸ்லீம்கள் தாக்கப்படுகிறார்கள் என்ற வதந்தியை பரவவிடுவதன் மூலம் இத்திய சக்திகள் தமது கைவரிசையை காட்டி வருகின்றன. காரைதீவு கிராமத்தில் உள்ள குடிநீர்க்கிணறுகள் அனைத்தும் சயனைட் இட்டு நஞ்சூட்டப்பட்டுள்ளன. அக்கரைப்பற்றில் 150க்கு மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. தீவைப்புகள், கொலைகள் தொடர்கின்றன. இதுவரை 12,000க்கு மேற்பட்டோர் அகதிகளாகியுள்ளனர்.

தமிழ் முஸ்லீம் மக்களிடையே தூண்டிவிடப்பட்டிருக்கும் இந்த கலவரத்தினுல் பாதிப்புக்குள்ளாகியுள்ளவர்கள் தமிழ் முஸ்லீம் அப்பாவி மக்களே! இந்த கலவரங்களை உடனடியாக கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளைப் பலரும் மேற்கொண்டு வரும் வேளையில் வெளிநாட்டமைச்சர் ஹமீது' வெளியிட்டுள்ள 'கருத்தொன்று இங்கு முக்கிய அர்த்தத்தைப் பெறுகிறது.

'இஸ்லாம் சமானத்தை போதிக்கிறது. வன்முறையை வெறுக்கிறது. எனவே சமுதாயமாற்றத்தை கொண்டுவருவதற்கான வன்முறை மற்றும் புரட்சிகளை இலங்கை முஸ்லீம்கள் நிராகரிக்க வேண்டும்.'

நடைபெறும் கலவரத்தை முடிவுக்கு கொண்டுவருவதிலோ அதிலீடுபடும் அரசபடைகளை தடுத்து நிறுத்துவதிலோ காட்டும் அக்கறையை விடவும் 'ஹமீது' அவர்கள் 'புரட்சிக்கு' எதிராக குரலெழுப்புவதிலேயே அக்கறையாக இருக்கிறார் என்பது, கலவரத்தில் இவர்களது பின்னணி பற்றிய சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாயுள்ளது. அரசபடைகளும் பிற்போக்கு யூ. என். பி குண்டர்களும்சேர்ந்துநடாத்தும் இவ்வெறிச் செயல்களுக்கு போராளிகளை காரணமாக்க தீவிர முயற்சியை அமைச்சர் மேற்கொண்டுள்ளது தெளிவாகிறது.

தமிழ், முஸ்லீம் பிளவுகள் மூலம் லாபமடையப் போகும் 'ஹமீது'களை அம்பலப்படுத்தவும் தமிழ் முஸ்லீம் மக்களிடையேயான நல்லுறவை ஊட்டும் விதத்திலும் கலவரங்களை தடுத்து நிறுத்துவதிலும் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து செயல்படுவது மிகவும் அவசியமாகும்.

## இரணைமடு சிறுபோக நீர்ப் பங்கீட்டில் மோசடி!

இரணைமடு சிறுபோக நெற்செய்கைக்கு தண்ணீர் 3ம் வாய்க்காலில் 'அடக்கி விதைக்க' அதிகார முதலாளி வர்க்கத்தினரால் (நீர்ப்பாசனத் திணைக்களம்) கோரப்பட்டது. இவர்கள் கூறிய காரணம் தண்ணீரைச் சேமிக்க வேண்டும் என்பதே. தண்ணீரைச் சேமிப்பதாயின் குளத்திற்கு கிட்டவுள்ள 1ம், 2ம் வாய்க்காலிற்கோ அல்லது தண்ணீர் இலகுவாக சுவறிப் பாயக்கூடிய 5ம், 6ம் வாய்க்கால்களுக்கோ தண்ணீர்ப் பங்கை அடக்கி விதைக்க கோரலாம் என தண்ணீர் கூட்டத்தில் மக்கள் உண்மையை எடுத்தியம்பினர். பிறகு உருத்திரபுரம் 8ம் வாய்க்காலுக்கும் வட்டக்கச்சிக்கும் தண்ணீர் விடக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டப்செய்ததால் அவற்றுக்கு அதிகாரிவர்க்கம் அடிபணிந்தது போராட்டமின்றேல் வெற்றியில்லை என்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

இவ்வாறு அநியாயமான நீர்ப்பங்கீட்டால் விவசாய நிலங்கள், ஒருசில நில முதலைகளிடம் குவிந்துள்ளன. இதனையடுத்து வறிய விவசாயிகளும், மத்தியசர விவசாயிகளும் தமது தண்ணீர்ப் பங்கை நில முதலைகளுக்கே விற்றுவிடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

வறிய விவசாயிகள் சிறு அளவான நிலத்தை வைத்து தமது வாழ்வை ஓட்டிவருகின்றனர். இவர்களது சிறு அளவிலான உற்பத்தி உணவுக்கே போதுமானதாயிருப்பதில்லை. அடுத்த போகத்திற்கான விதை நெல்லை கடன்பட்டே வாங்குகின்றனர். உரம், கிருமிநாசினி விலையேற்றத்தால் (பல்தேசிய நிறுவன சுரண்டலால்) மேலும் மேலும் நட்டத்திற்காளாகி வறுமைக்கு தள்ளப்படும் வறிய விவசாயிகள் இரு போக பயிர்ச்செய்கை மூலமே தமது வாழ்வை ஓட்டிவருகின்றனர். இந்நிலையில் சிறுபோக பயிர்ச் செய்கை நில முதலைகளால் தடுக்கப்படுவது இவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

வெளியீடு: செய்தி வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

# ஏகாதிபத்தியத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளாகியுள்ள மத்திய அமெரிக்கா

உலகின் போராட்டம் உள்ள பகுதிகளில் மத்திய அமெரிக்காவும் ஒன்று. வட அமெரிக்கக் கண்டத்தையும் தென் அமெரிக்கக் கண்டத்தையும் இணைக்கின்ற பகுதியே மத்திய அமெரிக்கா ஆகும். மெக்ஸிக்கோ, கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளைக் கொண்டது வட அமெரிக்கா. தென்னமெரிக்க கண்டத்தில் பனாமா, சிலி, ஆஜென்டீனா, கொலம்பியா, பெரு முதலிய பல நாடுகள் உள்ளன. இரண்டையும் இணைந்து வைக்கும் மத்திய அமெரிக்கப் பகுதியில் குவாதமாலா, எல்- சல்வடோர் ஹொண்டூராஸ் நிக்ரகுவா கொஸ்டாரிக்கா என்ற ஐந்து நாடுகள் உள்ளன.

லத்தீன் இனத்தவரான ஸ்பானியர்களின் ஆட்சியில் இருந்தமையால் மத்திய அமெரிககாவையும் தென் அமெரிக்காவையும் சேர்த்து லத்தீன் அமெரிக்கா என்றும் அழைப்பதுண்டு. அத்திலாந்திக்சமுத்திரத்தையும் பசுபிக் சமுத்திரத்தையும் இணைக்கும் பனாமாக் கால்வாய் மத்திய அமெரிக்காவின் தென்கோடியில் உள்ளதனல் மத்திய அமெரிக்கா சர்வதேச இராணுவ முக்கியத்துவமுடையதாகும். ரஷ்யாவின்சார்பு நாடான கியூபா, இந்நாடுகளுக்கு அருகில் உள்ளது. கியூபாவில் ரஷ்யப் படைகளும் இராணுவத்தளங்களும் உள்ளன மத்திய அமெரிக்காவைச் சுற்றிலும் அமெரிக்க கடற்படை, விமானப்படை, இராணுவத் தளங்கள் உள்ளன. இந்நாடுகளில் ஒன்ருன நிக்கரகுவாவில் புரட்சிகர அரசாங்கம் உள்ளது.

மக்கள் தொகை:

குவாதமாலா; 75 லட்சம் பேர்.
எல்- சல்வடோர்: 49 லட்சம்பேர்.
நிக்ரகுவா; 25 லட்சம்பேர்
கோஸ்டாரிக்கா: 23 லட்சம் பேர்.

இவ்வைந்து நாடுகளும் ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளைப்போல அமெரிக்க தொழில் துறைக்கே மூலப்பொருட்களை வழங்குகின்றன. ஒவ்வொரு பொருள் தான் பெரும்பான்மையாக விளைவிக்கப் படுகின்றது. 1978ல் கோப்பியை ஏற்றுமதி செய்து எல்- சல்வடோர் 48%மும், குவாதமாலா 42%மும், கொஸ்டாரிக்கா 36%மும் பெற்றன. வாழைப்பழத்தை ஏற்றுமதி செய்து பனமா 56%மும் ஹொண்டுராஸ் 47%மும் பெற்றன. நிக்ரகுவா பருத்தியை ஏற்றுமதி செய்து 42% வருமானத்தை பெற்றது. அமெரிக்காவின் தொழிலுக்கு மலிவான மூலப்பொருட் வழங்கும் பொருட்டு மக்கள் கசக்கிப் பிழியப்படுகின்றனர் எல்லையில்லா வறுமைக்குள் மூழ்கடிக்கப்படுகின்றனர்.

வரலாற்று அடிப்படையில் பார்த்தால் மத்திய அமெரிக்கா இப்போது லத்தீன அமெரிக்கா என்று அழைக்கப் படும் பகுதிகளில் ஒன்ருகும், லத்தின் அமெரிக்கா நாடுகள் முழுவதிலும் மூன்று பெரும் இந்தியப் பழங்குடிகள் வாழ்ந்தனர். கொலம்பஸ் 1502ல் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததும், ஸ்பெயின் நாட்டவர்கள் படையெடுத்துக் குடியேறினர். அப்போது தெய்வ அடியாரின் இன்கா பேரரசு தென் அமெரிக்காவின் பெரும் பகுதியில் பரவியிருந்தது. மெக்ஸிக்கோ பள்ளத்தாக்கிலும் வக்கடானிலும் அஸ்டெக் கூட்டிணைப்பரசு உயர்ந்தளவு திறமையுடன் விளங்கியது. மத்திய அமெரிக்காவில் மிகவும் மேம்பட்ட மாயா நாகரீகம் தழைத்தோங்கியது. ஸ்பானியர்கள் படையெடுதது வெல்லுவதற்கு பல நூற்ருண்டுகளுக்கு முன்பு நிலவிய இந்த மாயாக்கள் வானியலிலும், காலத்தையும் இடத்தையும் அளப்பதிலும் பேர்பெற்று விளங்கினர். கொலம்பஸ் பனமாவில் வந்து இறங்கிஞர். 1520களின் தொடக்கத்தில் மத்திய அமெரிக்கா முழுவதுமே ஸ்பானியர்களிஞல் ஆளப்பட்டது. பனமா தவிர்ந்த மற்றய மத்திய அமெரிக்கா முழுவதும் மெக்ஸிக்கோ சிடியைத் தலைநகராகக் கொண்ட குவாதமாலாவின் பொதுத் தலைமையின் கீழ் ஆளப்பட்டது. தற்போதய லத்தின் அமெரிக்க சந்தேறிகள் அங்கிருந்த பழங்குடி மக்களாகிய செவ்விந்தியர்களை ஈவிரக்கமற்ற முறையில் அழித்து ஒழித்துவிட்டனர். உளளூர் மக்களை அடிமை உழைப்பாளராக்கி வேளாண்மை செய்யத தொடங்கினர்.

அயல்நாட்டுப் படையெடுப்புகளுக்கு முன்பு அஸ்டெக்கினர், இன்காவினர் மாயாக்கள் மொத்தம் எண்பதுலட்சம் பேர் (ஏரத்தாள) இருந்தனர் நூற்றைம்பது ஆண்டுகள் கழிந்தபிறகு முப்பத்தைந்து லட்சம்பேரே உள்ளனர். உதாரணமாக லிமாவுக்கும் பைற்றுவுக்கும் இடையில் ஒருகாலத்தில் இருபது லட்சத்திற்கும் அதிகமான செவ்விந்தியக் குடும்பங்கள் வாழ்ந்தன. 1685ம் ஆண்டில் இதில் 4000 குடும்பங்களே மீதமிருந்தனர்.

### அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு

குவாதமாலா 1821ல் ஸ்பெயினிடமிருந்து 'சுதந்திரம்' பெற்றது. 1822-23ம் ஆண்டில் பலமாதங்களையில் அகஸ்டினின் மெக்ஸிககோ பேரரசு மத்திய அமெரிக்காவை ஆண்டது. இவ்வாட்சி குறுகிய காலமே நீடித்தது. அகஸ்டின் வீழ்ந்தபிறகு, மத்திய அமெரிக்க கூட்டிணைப்பரசு ஒன்று உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் அமெரிகக ஜனதிபதியான ஜேம்ஸ் மக்கன்ரோ அப்பகுதியில் வெளிச்சக்தி எதுவும் வாலாட்டக்கூடாது என்று பறைசாற்றிஞர். மத்திய அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவின் புதிய குடியரசுகள் மீது ஸ்பெய்ன் பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் மீண்டும் படையெடுத்து குடியேற்ற நாடுகளாக்கி விடாது "பாதுகாப்ப"தே மன்ரோ கொள்கையின் உள்நோக்கமாகும்.

1839ல் கூட்டிணைப் பாட்சிக்குள்ளே பூசல்கள் ஏற்பட்டதால் அதன் உறுப்பு நாடுகளான குவாதமாலா, எல்சல்வடோர், நிக்கரகுவா ஹொண்டுராஸ் கோஸ்ட்டாரிக்கா ஆகிய ஐந்தும் 'சுதந்திர' குடியரசுகளாயின. கொலம்பியாவுடன் சேர்ந்து பனமா 'சுதந்திரம்' அடைந்தது. வெனிஸ்லோ, ஈக்குவேடார் இரண்டும் 1933 வரையிலும் கொலம்பியாவின் பகுதியாகவே இருந்தன.

1850ல் வில்லியம் வாக்கர் என்பவன் ஒரு கொலைகாரக் கும்பலுடன் மத்திய அமெரிக்கா மீது படையெடுத்தான். 'மார்க்கன் அன்ட் காரிக்கான்' என்ற பாங்கர்களுக்காக (Bankers) அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவோடு இப்படையெடுப்பை நடத்திஞன். அடுத்தடுத்து படையெடுத்து, கொள்ளையடித்து, கொலைசெய்து தன்னைத்தானே நிக்ரகுவா எல்சல்வடோர், ஹொண்டுராஸின் ஜனதிபதியாக அறிவித்துக் கொண்டான் அடிமைமுறையை இப்பகுதியில் மீண்டும் நிலைநாட்டியபிறகு 'வெற்றிவீரனு'க அமெரிக்காவுக்கு திரும்பிஞன். அதன் பிறகு படையெடுப்புகளும், தலையீடும், குண்டடிகளும். துப்பாக்கி முனை ஒப்பந்தங்களும் ஒன்றுமாற்றி ஒன்ருக நிகழ்ந்தன.

1903 நவம்பர் 6ம்நாள் பனமா சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டு மூன்று நாள் கழித்து பனமாக் கால்வாயை கட்டுவதற்கு அதிகாரம் தருகிற ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்கா கைச்சாத்திட்டது. அமெரிக்கா தலையிடுவதற்கு அதிகாரமளிக்கும் வகையில் அரசியல்அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

1914ல் ஒகஸ்றில் பனமாகால்வாய் திறக்கப்பட்டது.

1950களிலிருந்தும், அமெரிக்காவில் முதலாளியம் வளர்ந்ததில் இருந்தும் லத்தீன் அமெரிக்கா முழுவதுமே அமெரிக்காவின் தொழிற் துறைக்கு மலிவு விலையில் மூலப்பொருட்களை வழங்குபவையாக மாற்றியமைக்கப்பட்டது. 1880ல் மத்திய அமெரிக்கா உருமாற்றம் பெற்றது. புதிதாக அமைக்கப்பெற்ற கோப்பித் தோட்டங்கள் உலக உற்பத்தியில் ஆறிலொரு பகுதியை விளைவித்தன. கோப்பி இந்தப் பகுதியை உலகச்சந்தையுடன் இறுகக் கட்டிப்போட்டது. முதலில் ஆங்கிலேயரும், அடுத்து ஜெர்மனியரும், இறுதியாக அமெரிக்கரும் உள்நாட்டு கோப்பித்தோட்ட முதலாளிகளை உருவாக்கினர்.

எனவே, லத்தீன் அமெரிக்க நாடுகள் எல்லாவற்றிலும் ஏதாவது ஒரு பொருள் மட்டுமே விளைவிக்கப்படுகிறது. பலதுறை சார்ந்த பொருளியல் வளர்ச்சி அங்கே அனுமதிக்கப்படுவதில்லை. உள்நட்டுத் தேவைக்கான உணவு உற்பத்திகூட ஊக்குவிக்கப்படாமல் தடுக்கப்படுகிறது. தங்களுடைய செல்வ வளங்களையெல்லாம் இந்த நாடுகள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கின்றன. உதாரணமாக 'யுனைற்ரெட் பழக் கொம்பனி' கொலம்பியாவின் மிகப் பெரிய பண்ணை நிறுவனமாகும். இதற்கென சொந்தமாக துறைமுகங்கள், இரும்புப்பாதைகள் நிலங்கள் கட்டிடங்கள், நீர்நிலைகள் எல்லாம் உண்டு. மத்திய அமெரிக்காவின் காடுகளை வெட்டித்தள்ளி இந்தக்கொம்பனி வாழைமரங்களைப் பயிரிட்டது. இன்றளவும், பனமாவிலும் ஹொண்டுராஸிலுவாழைப் பயிர்தான் பிரதானமாக விளைவிக்கப்படுகிறது.

மற்ற எல்லா லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இதைப்போன்ற நிலையே இன்றளவும் உண்டு. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கோப்பியின் பங்கு கொலம்பியா- 64%, எல்சல்வடோர் 48%, பிறேசில் 43%, குவாதமாலா 42% கோஸ்டாரிக்கா 36%. வாழையின் பங்கு; ஈக்குவாடார் 61%, பனமா56% டொமினிக்கன் குடியரசு- 56%. இறைச்சி, தோல், கம்பளி ஏற்றுமதி- உருகுவே 53%, ஆஜென்ரீன 38% செம்பு ஏற்றுமதி சிலி 74% பெரு 26%. ரின் ஏற்றுமதி: பொலிவியா 54%, பெற்ரோலிய மூலப்பொருள்- வெனிசூயேலா 93%

கடந்த இருநூறு ஆண்டுகளாகவே அமெரிக்கா தன் படைவலிமையாலும், பகற்கொள்ளையாலும், படுகொலையாலும், சாத்தியமான எல்லா வழிகளாலும் லத்தீன் அமெரிக்காவின் செல்வ வளங்கள் முழுவதையும் பறித்து எடுத்துக் கொள்கிறது 1904ல் அமெரிக்க ஜனதிபதி ரூஸ்வெல்ட் முன்பு மன்ரோ அறிவித்த கொள்கையின் தொடர்ச்சியாக "லத்தீன் அமெரிக்கா

(3-ம் பக்கம் பார்க்க)

# பங்களாதேஷ் மாணவர்களின் இன்றைய நிலை: எமது மாணவர்களுக்கு ஒரு பாடம்

பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவர் படுகொலையைக் கண்டிக்கும் முகமாக நடத்தப்பட்ட ஊர்வலத்தின் மீது சுதந்திர பங்களாதேஷின் ஜனாதிபதி இராணுவ ஜெனரல் எர்ஷாத்தின் கூலிப்பட்டாளம் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டது.

பங்களாதேஷிலும் அந்நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்களின் பங்களிப்பு இருக்கவே செய்தது. அதாவது இன்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் நடப்பதுபோலவே மாணவர்கள் தமது சொந்த விடுதலையைக் கருத்தில் கொள்ளாமல் அங்கிருந்த கெரில்லாக் குழுக்களில் கண்மூடித்தனமாக இணைந்து கொண்டனர். இவர்கள் பாகிஸ்தான் இராணுவத்தைத் துரத்துவதையும் எல்லைப் பிரிப்பையும் மட்டுமே தமது நோக்காகக் கொண்டிருந்தவரே ஒழிய சமூக மாற்றம்,சோஷலிசப் புரட்சி எதிலுமே இவர்கள் அக்கறை காட்டவில்லை. பாகிஸ்தான் இராணுவமும் வெளியேறியது. ஆனால் பங்களாதேஷ் விடுதலைக்குப் பதிலாக பங்களாதேஷ் மட்டுமே கிடைத்தது. விடுதலை கிடைக்கவில்லை. அங்கிருந்த பாகிஸ்தான் இராணுவத்துக்குப் பதில் பங்களாதேஷ் இராணுவம் நிறுத்தப்பட்டது. ஆனால் மாணவர் சுதந்திரமோ அவர்களுக்கான ஜனநாயக உரிமைகளோ வழங்கப்படவில்லை. அவர்கள் செய்த தவறு இதுதான். எந்தவொரு சரியான அரசியல் கண்ணோட்டமற்றவர்களாக அங்கிருந்தசுரண்டல் சமூக அமைப்பை மாற்றி ஓர் முற்போக்கான சமூக அமைப்பையோ முற்போக்கான கல்விமுறையையோ படைப்பதற்காக வேலை செய்யத் தவறியமைதான். பாட்டாளிவர்க்கத் தலைமையில் புதிய ஜனநாயக மக்கள் குடியரசை வென்றெடுக்கவும் சோஷலிச சமூக அமைப்பை வென்றெடுப்பதற்கு மக்கள் மத்தியில் வேலை செய்யத் தவறியமையுந்தான். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு தவறான போக்குகள் காணப்படுகின்றது. முதலாவது கண்மூடித்தனமாகத் தமது சொந்த விடுதலையைக் கருத்திற் கொள்ளாமல் கெரில்லாக் குழுக்களில் இணைந்து கொள்வது. இரண்டாவது, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று முற்றாக ஒதுங்கிக் கொள்கின்ற போக்கு. இவ்விரண்டு போக்குகளும் மிகவும் தவறானதும் தீமை விளைவிப்பதுமாகும். எனவே நாம் ஒரு சரியான அணியின் கீழ் வேலை செய்வது அவசியமாகும்.

இன்று எம்மத்தியில் இருக்கும் கல்வி முறையானது பிற்போக்கானதும் இன்றிருக்கும் சுரண்டல் சமூக அமைப்பை மேலும் வலுப்படுத்துவதும் ஆகும். இன்றைக்கிருக்கும் பிற்போக்கு ஏகாதிபத்தியத் தரகுமுதலாளிய அரசில் எமது பிரச்சனைகள் தீர்க்கப்படும் என்றோ எமக்குரிய ஜனநாயக சுதந்திரங்கள் வழங்கப்படுமென்றோ நாம் எதிர்பார்க்க முடியாது. மாணவர்களுக்கான பிரச்சனையென்பது ஓர் சோஷலிச சமூக அமைப்பிலேயே தீர்க்கப்படும். எனவே இன்று நடக்கும் தேசியவிடுதலைப் போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியாக பாட்டாளி வர்க்கத் தலைமையில் வென்றெடுப்பதனூடேயே சோஷலிச சமூக அமைப்பை நோக்கி முன்னேற முடியும். ஆகவே நாம் இன்று செய்யவேண்டிய வேலை மக்கள் மத்தியில் புதிய ஜனநாயகப் புரட்சிக்கான கருத்துக்களைக் கொண்டுசெல்வதும் அவர்களை போராட்டத்திற்கு தயாராக்குவதும் தான். மாறாகக் கெரில்லா குழுக்களிலோ அல்லது மாணவர் அணிகளென தம்மை அழைத்துக்கொள்ளும்பிற்போக்குஸ்தாபனங்களில் அணிதிரண்டு கொள்வதோ அல்ல. இன்றுள்ள மாணவர் அமைப்புகள் இன்றிருக்கும் பிற்போக்கான கல்வி முறையையோ சமூக அமைப்பையோ மாற்ற முயலாமல் இன்றைக்கிருக்கும் ஏகாதிபத்திய தரகு முதலாளிய அரசுடனும் அதனோடு ஒட்டிய சமூக அமைப்புடனும் சமரசம் செய்துகொள்ளவும் இந்த அரசில் சில சலுகைகளை பெற்றுவிடவுமே முயற்சிக்கின்றது. ஒருபொழுதும் மாணவர் பிரச்சினையானது இந்த சமூக அமைப்பில் தீர்த்து வைக்கப்படவே முடியாது. அது ஓர் சோஷலிச சமூக அமைப்பிலேயே தீர்க்கப்பட முடியும், நாம் ஓர் சோஷலிச சமூக அமைப்பை கொண்டு வருவதற்காக மக்கள் மத்தியில் வேலை செய்யத் தவறுவோமானால் நாம் நிச்சயமாக மீண்டும் மீண்டும் துப்பாக்கிக் குண்டுகளினால் முத்தமிடப்படுவோம்.

## ஏகாதிபத்தியத்தின் ஒடுக்குமுறைக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் எந்தப்பகுதியிலும் தலையிடும் உரிமை அமெரிக்காவுக்கு உண்டு என்று அறிவித்தார். 1898முதல் 1920 வரையில் மட்டுமே அமெரிக்கப் படைகள் லத்தீன் அமெரிக்காவில் இருபது தடவைகள் இறங்கின.

1935ல் ஜெனரல் ஸ்மெட்லே டிபட்லர் என்பவர் லத்தின் அமெரிக்காவில் வகித்த பாத்திரம் பற்றி மிகவும் துல்லியமாகச் சுருக்கிக் கூறினார்: நான் முப்பத்து மூன்று ஆண்டுகளாக இந்த நாட்டின் (அமெரிக்கா) மிகவும் சுறுசுறுப்புள்ள இராணுவப்படையில்- கடற்படையில், ஓர் உறுப்பினராக இருந்து தீவிரப்பணி ஆற்றினேன். அதிலிருந்த எல்லாப் பதவிகளையும் நான் வகித்து விட்டேன். சுருங்கச் சொன்னால் முதலாளியத்திற்காக தொழிலாளரிடமிருந்து பணம்பறிப்பவனாக இருந்தேன். 1914ல் அமெரிக்காவின் எண்ணெய்த் தொழில் நலன்களுக்குப் பாதுகாப்பான இடமாக மெக்ஸிக்கோவை மாற்ற உதவினேன். தேசிய நகர(National City Bank) வருவாயை வசூலிக்க ஏற்ற மதிப்பான இடமாக ஹெயிட்டியையும், கியூபாவையும் மாற்ற உதவினேன். 1909-12 ஆண்டுகளில் பிரெளண் சகோதரர்களின் பன்னாட்டு வங்கி நிறுவனத்திற்காக நிக்கருவாவைத் தயார்செய்ய உதவினேன். 1916ல் அமெரிக்க சீனித்தொழில் நலன்களுக்காக டொமினிக்கன் குடியரசை சரிசெய்தேன் 1903ல் அமெரிக்காவின் பல தேசிய நிறுவனங்களுக்காக ஹொண்டுராஸை சரிக்கட்ட உதவினேன்.

ஆனால் லத்தீன் அமெரிக்க மக்கள் ஒருபோதும், அடக்கியிருக்கவில்லை. பல நூற்றாண்களாக ஆள்வோரை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள், இப்போதும் மத்திய அமெரிக்காவில் நடக்கிற போராட்டங்கள் நியாயத்திற்காகவும், சுரண்டலை எதிர்த்தும் நடக்கிற போராட்டங்களின் தொடர்ச்சியே, அவை பற்றி தொடர்ந்து வரும் இதழ்களில் வெளிவரும்.

---

நாம் யுத்தத்தை ஒழிப்பதற்காக வாதாடுபவர்கள்; நாம் யுத்தத்தை விரும்பவில்லை; ஆனால் யுத்தத்தை யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்க முடியும். துப்பாக்கியைஒழிக்க வேண்டுமானால் துப்பாக்கி ஏந்துவது அவசியம்!

மாஓ

---

## ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக சிங்கள மாணவரின் போராட்டம்!

தமிழீழப் பிரதேசங்களில் அனைவரது கவனமும் குவிந்திருப்பதால் ஸ்ரீலங்காவில் உருவாக்கப்படும் சர்வாதிகார சட்டங்களும் அவற்றுக்கெதிரான போராட்களும் அவ்வளவாக கவனிப்பு பெறாத துரதிஸ்டம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. பேரினவாதச் சேற்றினுள் அமிழ்ந்து போயிருக்கும் சிங்கள மக்களின் இத்தகைய நியாயமான போராட்டங்களுக்குஆதரவளிப்பதானது அச்சேற்றிலிருந்து அவர்களை மீட்டெடுக்க எங்கள் சார்பான முக்கிய பங்களிப்பாக இருக்கும். ஆனால் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இயக்கங்கள் இது பற்றி எதுவித அக்கறையுமற்று ஆயுத ஹிஸ்ரிரியா பிடித்து அலைகின்றார்கள்.

ஸ்ரீலங்கா அரசாங்கம், பல்கலைக்கழகங்களில் இதுவரை இருந்து வந்த மாணவர் சங்கங்களை தடைசெய்து, அதற்குப்பதில் "மாணவர்- ஆசிரியர் நல்லுறவுச் சங்கம்" என்ற பெயரில் தமது கைக்கூலிகளை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக புதிய பல்கலைக்கழக திருத்தச் சட்டத்தை உருவாக்கியுள்ளது இதுசகலமாணவர்போராட்டங்களையும் தடைசெய்வதுடன்மாணவர்களின்சாதாரண முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளையும் பறித்

( 6-ம் பக்கம் பார்க்க )

# பிரமைகளைக் களைவோம்! போராட்டத்திற்குதயாராவோம்!

வட்டமேசை மாநாட்டுப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தபின் பேச்சுவார்த்தைகளால் பயனே கிடையாதா என்று மனம் புண்பட்டுப் போய் அங்கலாய்த்த கூட்டணி இருக்கூட்டத்திற்கும் அதன் எடுபிடிகளுக்கும் அரசியல் வியாபாரம் திரும்பவும் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.

31- 3- 1985 வீரகேசரி வாரமலரில் வெளியான பேட்டியொன்றில் நீலன் திருச்செல்வம் ஒரு மகத்தான உண்மையை திருவாய் மலர்ந்தருளியுள்ளார். 'தமிழர் தலைவர்கள் சென்னையில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை சந்தித்து இங்குள்ள நிலைமைகளை விளக்கி வருகின்றனர். மற்றும் மத்திய மாநிலத் தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு நீதியான அரசியல் தீர்வுக்காக உதவுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். இமாம் கொமெய்னி பாரிசில் இருந்துகொண்டுதான் ஈரான் மக்களை தட்டியெழுப்பினார். இறுதியில் இஸ்லாமிய மறுமலர்ச்சியே அங்கு மலர்ந்தது. எமது தலைவர்கள் தப்பி ஓடவில்லை. தற்காலிகமாகவே அங்கு போய் இருக்கின்றனர்.''

பார்த்தசாரதி போய் இன்று 'பண்டாரி' மூலம் தொடர்கிறது பேச்சுவார்த்தை. இளைஞர்கள் ஆயுதங்களைப் போட்டால் இராணுவம் வாபஸ்பெறப்படும், கூட்டணித் தலைவர்கள் பாராளுமன்றத்திற்கு செல்லலாம் என்றெல்லாம் அரசுதரப்பில் அறிவிக்கப்படுகிறது.

மாவட்ட சபைகள், மாநில சுயாட்சி, பிரதேச சுயாட்சி என்றெல்லாம் ஆங்காங்கே யார் யாரோவெல்லாம் பிதற்றுகின்றவைகள் யாழ்ப்பாணத்து 'தினசரி' களில் முக்கிய இடம்பெற்று வருகின்றன. தலைவர்கள் இந்தியாவில் நடத்தும் 'பேச்சுவார்த்தை அரசியலும், 'பண்டாரி' இலங்கையரசியலின் அதிமுக்கியஸ்தர்களான 'ஹேமா பிறேமதாச'க்களுடன் நடத்தும்பேச்சுவார்த்தைகளும் இன்னும், ஆங்கில எழுத்தாளர்கள், அரசியல் வாதிகளின் 'மகத்தான' அபிப்பிராயங்களும், ஆங்காங்கே எங்காவது நடக்கும் ஓரிருதாக்குதல்களும், மாநில செய்தி, B.B.C. தமிழோசை செய்தி, வெரித்தாஸ்... இன்னும் உலகின் எங்காவது ஒரு மூலையில் ஒலிக்கும் 'ஈழத்தமிழர்' பற்றிய குறிப்புக்களும், பெரிதும் பிரச்சாரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தைப் பற்றியோ தேசியரீதியாக அவர்கள் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்துவிடப்படும் ஒடுக்குமுறைகளிலிருந்தான விடுதலைபற்றியோ, அல்லது அதை நிவர்த்திக்க இந்த மக்கள் எவ்வாறு போராடுவது என்பதுபற்றியோ இந்த தலைவர்களும் சரி 'தினசரி'களும்சரி சிந்திப்பது கிடையாது. இந்த சூழ்நிலையில் தமது 'வியாபாரத்தை' பெருக்குவதையே தொழிலாகக் கொண்ட இந்த கூட்டணி சூழ்ச்சிக் கூட்டம், தமது 'அஞ்ஞாத' வாசத்தை விளக்க இமாம் கொமேனியை துணைக்கு அழைக்கிறது.

தமிழீழ பெருமுதலாளிய தரகுமுதலாளிய பிற்போக்காளர்களுக்கு பாதுகாப்புதேடும் இடைத்தரகர்களாகசெயல்பட்டுவரும் 'கூட்டணியினர்' தமிழ்மக்களின் விடுதலைக்காக இந்தியாவில் போராட்டம் நடத்துவதாக அடிக்கின்ற வாய்ச் சவடால்களை இனியும் தமிழீழமக்கள் நம்பத் தயாராக இல்லை. தமிழீழ மக்களின் விடுதலைக்காக இந்திய தலைவர்களை சந்திப்பதன்மூலம் அந்நியர்களின் உதவியால் எமது விடுதலை சாத்தியமாகலாம் என்ற பிரமைகளை மக்களிடம் ஊட்டிக்கொண்டிருக்கும் இக்கையாலாகாத கூட்டணியினர், தமது வர்க்க சுகபோக வாழ்வுகளை இழக்காது வாழ்வதற்காக செய்யும் பித்தலாட்ட நடவடிக்கைகளே இந்த 'சந்திப்புகள்!' இடையிடையே தமிழ்மககளை கடவுள்தான், காப்பாற்ற வேண்டும்' என்று முதலைக்கண்ணீர் வேறு வடிக்கத் தவறமாட்டார்கள். தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பாதுகாக்க மட்டும் கடவுளை நம்பாது இந்தியாவிற்கு ஓடிவிட்டார்கள். தமிழ்மக்களுக்குமட்டும் 'கடவுள்' தான் துணையாம்!

போகட்டும்
தமிழீழமக்களே;

இந்தப் பித்தலாட்டக்காரர்களும் பத்திரிகைக ஊட்டிவரும் சகல பிரமைகளையும் களைந்தெறிந்துவிட்டு, எமது தேசத்தின் விடுதலையை வென்றெடுக்க நாமே போராடத் தயாராகுவோம். பொய்யான பிரமைகளை ஊட்டுவதன்மூலம் எமது மக்களை மேலும் மேலும் மோசமான அடக்குமுறைக்குள்ளாதலையிட்டு அக்கறைப்படாத நிலையையே இந்த பிற்போக்காளர் உருவாக்கியுள்ளனர். எங்கள் விடுதலையை நாமே பெறவேண்டும். எத்துணை துன்பமாயினும், கடினமாயினும் அதை நாமே சாதித்தாகவேண்டும். இலங்கை அரசுடன் சமரசம் செய்துகொள்ளவும், போராட்டத்தை இழுத்தடித்து தமது வர்க்கநலனையும் வயிற்றுப் பிழைப்பையும் உத்தரவாதம் செய்துகொள்ளவும் தயாராயுள்ள அனைத்து சரணடைவு வாதிகளையும்', நிராகரிப்போம். மக்களே, நாம் பலமற்றவர்கள் எம்மால் தனியாக எதுவும் செய்யமுடியாதுஎன்று போதிக்கும் இந்த 'அழுமூஞ்சிகளை' தூக்கியெறிவோம், 'எம்மால் எதையும் சாதிக்க முடியும்; காற்றினில் ஏறி இந்த விண்ணையும் சாடுவோம்' என்ற துணிவுடன் இச்சரணடைவு வாதிகளை நிராகரித்து போர்க்கொடி உயர்த்துவோம். அனைத்துப் பிரமைகளையும் உடைத்தெறிந்து, பரந்துபட்ட மக்களின் புரட்சிகர யுத்தத்தை முன்னெடுப்போம். தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசை நோக்கி முன்னேறுவோம்.

**தோழமையுடன்**
**ஆசிரியர் குழு**

## தந்தையும் தனயர்களும்

'' தமிழர்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்'' என தந்தை செல்வநாயகம் அன்று கூறினர்.

'' தமிழர் பிரச்சனைதீர ஆண்டவனில் பாரத்தைப் போட்டு வழிபடுவோம்!'' என 'தந்தை' செல்வா நினைவு தூபியின் முன் இன்று (31. 4. 85ல்) தனயர்கள் சொல்கிறார்கள்'

## அரசதிகாரமின்றி....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தாது அரசதிகாரத்தைநிறுவுதான நோக்கத்தையே பிரதான நோக்கமாக கொண்டு மக்கள் நடாத்தும் யுத்தமே 'மக்கள் யுத்தமாகும்'

இந்த அரசதிகாரம் பற்றி பிரக்ஞையின்றி, என்னதான் வார்த்தைகளை இவர்கள் 'அழகாகக்' குறிப்பிட்ட போதும் மாமேதை லெனின் இதற்கான பதிலை ஒரு வார்த்தையில் சொல்லியுள்ளார் 'அரசதிகாரம் இன்றி அனைத்தும் மாயையே' எனவே 'மாலைய' குறிப்பிடும் இவர்களின் கருத்துக்கள் அதன் பெயருக்கேற்றபடி தெளிவற்று இருப்பது ஒன்றும் வியப்புக்குரியதல்ல.

இவர்களது இந்தப் பிரசுரத்தின் மாபெரும் குறைபாடான இது, பிரசுர முழுமையிலும் பீடித்து நிற்பதால், ஆபத்தான கருத்துக்களை தனது கருவறைக்குள் கொண்டதாக அமைந்துவிடுகிறது. இன்று இங்கு நிலவுகிற அரசு எத்தகையது, பரந்துபட்ட மக்கள் தமது கையில் அரசதிகாரத்தை எடுத்துக் கொள்வது எவ்வாறு, அதற்கேற்ற விதத்தில் அவர்கள் எவ்வாறு தம்மைத் தயார் செய்து யுத்தத்தை தொடுக்க வேண்டும் என்பன பற்றிய விசயங்களை குறிப்பிடுவதே உண்மையில் மக்கள் யுத்தம் பற்றிய விஞ்ஞான பூர்வமான மார்க்சீய ரீதியான - வரையறையாக இருக்கும். அதை விட்டு வெறுமனே மக்களை 'ஸ்தாபனமயப்படுத்துதல் ' 'அரசியல் உணர்வூட்டல், என்றெல்லாம் வெறும் வார்த்தைகளை நாம் உதிர்ப்பது, திருப்பவும் பிற்போக்காளர்களை பலப்படுத்தும் நடவடிக்கையாகவே அமைந்துவிடும். 'அரசதிகாரம்' பற்றிப் பேசாத போது இன்றைய 'அதிகாரம்' பெற்ற ஆளும் வர்க்கங்கள் பற்றிய பரந்துபட்ட மக்கள் மத்தியிலான பிரக்ஞையை ஆழப்படுத்துதலை நாம் தவிர்ப்பதாக அர்த்தப்படும். இது, விடுதலையை அளிப்பதற்கு பதில் பரந்துபட்ட மக்கள் கையில் பலமான விலங்குகளை இறுகப்பூட்டிவிடும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள இன்னும் ஒருவிசயம் பற்றி குறிப்பிட்டால் போதும். அது பிரயோசனமான சில விசயங்களை கொண்டுள்ளபோதும், இப்பிரசுரம் வெறும் மணியற்ற பதரே என்பதை தெளிவுபடுத்திவிடும்.

இவர்கள் திரும்பத் திரும்பக் குறிப்பிடும்'தனித் தனியாக ஸ்தாபனமயப்படுத்தல்' என்ற விவகாரமே இவர்களது பிரசுரத்தை 'பதரென' உறுதி செய்ய போதுமான விசயமாகும். மக்கள் மத்தியிலே காணப்படும் முரண்பாடுகள், பிளவுகளுக்கொப்ப அவர்களை 'தனித்தனியாக' 'ஸ்தாபனமயப்படுத்தல்' என்பதை இவர்கள் திரும்பத்திருப்ப வலியுறுத்தி வருகின்றனர். இவாகள் கூறுகிறார்கள்;

''மக்கள் யுத்தப் பாதையின் பிரதான அம்சம் மக்களை ஸ்தாபனமயப்படுத்தலாகும். இந்த மக்களை ஸ்தாபனமயப்படுத்தல் என்பதில் 'அவரவர் பிரச்சனைகளுக்கொப்ப தனித்தனியாக ஸ்தாபனப்படுத்தல்' என்ற விடயத்தில் நாம் மிகவும் ஆழமாக எமது கவனத்தை செலுத்துதல் வேண்டும்'' (பக்-10) இவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

''எனவே சாதிரீதியாக, வர்க்கரீதியாக பிளவுபட்டிருக்கும் இந்த மக்கள் மத்தியில் ஒருவருக்கொருவர் சந்தேகம் கொள்ளாத, ஒருவரை ஒருவர் பயன்படுத்த முடியாத (அடிக்கோடு எம்முடையது) சமத்துவமான ஒரு ஒற்றுமையை வளர்த்து அதன் மூலம் மக்கள் மக்கள் யுத்தப்பாதையை நோக்கி சரியாக வழிநடாத்திச் செல்ல வேண்டுமாயின் தனித்தனியாக அவர்களது ஸ்தாபன பலத்தை அதிகரிக்கச் செய்து ஒரு பொதுவான மார்க்கத்தின் கீழ் ஐக்கியப்படுத்துவதன் மூலமே சாதிக்க முடியும். இதனாலேயே மக்கள் போராட்டங்களில் தனித்தனியாக ஸ்தாபனப்படுத்தல் என்ற விடயத்தை அழுத்தமாக உயர்த்திப் பிடிக்க வேண்டியுள்ளது. (பக் 11)

அதாவது, வர்க்கங்களாகப் பிளவுபட்டிருக்கும் எமது சமூகத்தின் மக்கள் பிரிவினரை தனித்தனியாக 'ஸ்தாபனப்படுத்தல்' அவசியமென குறிப்பிடுகிறார்கள். இதன் மூலம், முரண்பட்ட பல்வேறு வர்க்கப்பிரிவினரையும் தனித்தனியே பலப்படுத்துகின்ற செய்கையில் ஈடுபடுவது அவசியம் எனக் குறிப்பிடுகிறார்கள். இது இவர்கள் எந்த வர்க்கத்தின் 'ஆட்சியதிகாரத்தில்' அல்லது ஆதிக்கத்தில் கவனம் செலுத்துகிறார்கள் என்பதை தெளிவாக இனங்காட்டாத போதும் பூர்ஷ்வா வர்க்க நலன்களையே இது வலுப்படுத்தும். மேலும் நாம் மேலே அடிக்கோடிட்ட 'ஒருவருக்கொருவர் சந்தேகம் கொள்ளாத, ஒருவரை ஒருவர் பயன்

(6ம் பக்கம் பார்க்க)

# இன்றைய இளைஞர் இயக்கத்தின் இயல்பு

**இது 1937 டிசெம்பர் 31 ல் 'மாஓ' எழுதிய 'இளைஞர் இயக்கத்தின் இயல்பும் அதன் இன்றைய கடமைகளும்' என்ற கட்டுரையின் ஒரு பகுதியாகும். இன்றைய எமது சூழலுக்கும் பொருந்தியுள்ளது கருதியே தமிழில் தருகிறோம்.**

நமது யப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் இளைஞர்களை எதிர்நோக்கியுள்ள நிலைமைபற்றி பேசுவோமாக.

இன்றைய காலகட்டம் வரலாற்றில் என்றும் கண்டிராத மாபெரும் மாற்றங்கள் மாபெரும் போராட்டங்கள் நிகழும் காலகட்டம் என்பதில் சந்தேகமில்லை. எதிரியானவன் எங்கள் அனைவரையும், எங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் கூட, ஒரு நாடற்ற அடிமைகள் ஆக்கலாமென எதிர்பார்க்கிறான். நாம் பிழைத்திருக்க வேண்டுமென்றால், நாம் எதிர்ப்பு யுத்தமொன்றை நடாத்த வேண்டும். இவை போரிடும் காலங்கள் ஆகும். மே 4, மே30 இயக்கங்களின் சகாப்தத்துடனோ அல்லது மகத்தான 1925 புரட்சியுடனோ இவற்றை ஒப்பிட முடியாது. கடந்தகாலப் போராட்டங்கள் உள்நாட்டுப்போராட்டங்களாகவும், வரையறுக்கப்பட்ட அரசியல் போராட்டங்களாகவும் இருந்த வேளையில், இன்று நாம் ஒரு வெளிநாட்டுப் பகைவனின் பாஸிச ஆக்கிரமிப்புக்கு எதிராக முற்று முழுதான எதிர்ப்பு யுத்தம் ஒன்றை நடாத்திக் கொண்டிருக்கிறோம். இன்று சீன மக்கள் அனைவரும் - அடக்கி ஒடுக்கப்பட்ட, சூறையாடப்பட்ட, வதை செய்யப்பட்ட, ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அனைவரும் - எழுந்து நின்று எதிர்த்துப் போரிட வேண்டிய காலமாகும். இவ்வாறு நிலைமையானது பூரணமாக மாறிவிட்டது. நாடு முழுவதும் ஓர் இளக்கமான நிலையில் உள்ளபோது, இளைஞர்களின் பாத்திரம் மிகக்கடிமானதும், இருந்தும் மிக முக்கியமானதும் ஆகும். இன்று நம் வாலிபர்கள் முன்பு போல் - படித்து, உத்தியோகம் பார்த்து, திருமணம் செய்து வாழ்ந்தது போல் - இனிமேல் செய்ய முடியாது. அவர்கள் இனிமேல் வாழ்க்கையின் வழமையான போக்கைப் பின்பற்ற முடியாது. யுத்தம் வெடித்தெழுந்ததுடன் அவர்கள் சமாதானமாக தமது படிப்புக்களைத் தொடர முடியாது. நான்ஜிங், ஷாங்ஹாய், பெய்ஜிங் ரியென்ஜிங், குவாஸ்சோ, வுஹான் போன்ற கலாச்சாரகேந்திரங்களில் நான்கை ஏற்கனவே இழந்துவிட்டோம். பின்னணிப் பிரதேசங்களில் இருந்த பாடசாலைகளில் பெரும்பாலானவை ஏற்கனவே மூடப்பட்டு விட்டன. லட்சோபலட்சம் வாலிபர்களும், குறிப்பாக வடகிழக்கிலுள்ள நமது இளம் நண்பர்களும் படிப்பதற்குப் பள்ளிகளோ, மீள்வதற்கு வீடுகளோ இல்லாதிருக்கின்றனர். அவர்கள் முடிவின்றி அலைந்து கொண்டும், வாழ்க்கையின் எல்லையற்ற கசப்புணர்வைச் சுவைத்தும் வருகின்றனர். 'ஸுங்ஹுவா நதி' என்று சொல்லப்படும் பாட்டு ஒன்று இருக்கிறது. சோகத்தை அனுபவித்த எந்த ரசிகனுக்கும் உண்மையில் அது இதயத்தை ஒடிப்பதாக இருக்கும். இருந்தும் நாம் பெருமைப்பட, மிகவும் பெருமைப்பட வேண்டும். வாலிபர்கள் என்ற வகையில் இந்த மகத்தான கொந்தளிக்கும் காலங்களில் வாழ்வதற்காக நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். இத்தகைய காலங்களில்தான் நாம் படித்து முன்னேறுகின்றோம்; உருக்கேறி வளர்ந்து பலப்படுகின்றோம்.

நிகழ்காலம் எமது இளைஞர்களுக்கு உரியது மட்டுமல்ல, அவர்களுக்கு பிரகாசமான எதிர்காலம் ஒன்றும் இருக்கின்றது. அவர்கள் தமது சொந்த வாழ்வைப் பற்றி மாத்திரமல்ல, தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தமது பரம்பரையினர் அனைவரின் வாழ்வைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இன்றைய இளைஞன் என்பவன் எதிர்ப்பு யுத்தத்தில் இறுதி வெற்றியீட்டுவது எப்படி என்று மட்டுமல்ல, வாகை சூடிய பின்னர் சீனாவை ஒரு சுதந்திரமான ஜனநாயகக் குடியரசாக மாற்றுவது எப்படி என்றும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

எனவே, ஒரு சாதகமான கோணத்திலிருந்து நோக்கும்போது இதுதான் மிகச் சிறந்த காலம் என நாம் கருதுகின்றோம். இது இளைஞர்களின் இந்தச் சந்ததிக்கு சவால்களை எதிர்நோக்கி, பீடும் பெருமையும் எய்தி, பிரகாசமான ஒரு எதிர்காலத்தை வென்றெடுக்க ஒரு வாய்ப்பையும் வழங்குகிறது. இத்தகைய ஒரு வாய்ப்பு சாதாரண சந்தர்ப்பங்களில் கிடைத்தற்கு அரிதாகும்.

# அரசதிகாரமின்றி அனைத்தும் மாயையே

## 'மக்கள் யுத்தப் பாதையில் தமிழ்பேசும் மக்கள்' பற்றிய சில குறிப்புகள்

'மக்கள் யுத்தப்பாதையில் தமிழ் பேசும் மக்கள்' என்ற பெயரில் பாசறை வெளியீட்டாளர்'கள் அண்மையில் ஒரு சிறு பிரசுரம் வெளியிட்டுள்ளார்கள். வெளியீட்டாளர்கள் பிரசுரத்தின் முன்னுரையில் குறிப்பிட்டபடி மக்கள் யுத்தத்தை எவ்வாறு நடத்துவது என்ற நடைமுறைப் பிரச்சினையை விவாதிக்கும் இப்பிரசுரம் பற்றி சில வார்த்தைகள் குறிப்பிடுவது மிகவும் அவசியமானதென நினைக்கிறோம்.

முதலாவதாக இப்பாசறை வெளியீட்டாளர்கள் தமது நோக்கத்தை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்:

"எனவே மக்கள் யுத்தத்தின் சரியான நோக்கத்தை விவரித்து வரையறுப்பதன் மூலம் மக்கள் யுத்தத்தை சரியான பாதையை நோக்கி விரைவுபடுத்துவதே எமது நோக்கம்''

அடுத்ததாக, மக்கள் யுத்தத்தின் அடிப்படை நோக்கத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

'எமது கருத்துப்படி மக்கள் யுத்தம் இரண்டு நோக்கங்களை நிறைவு செய்ய வேண்டுமென நாம் கருதுகிறோம். முதலாவது முழுமக்களையும் ஸ்தாபனப்படுத்திபோராட்டத்தில் அரசியல் உணர்வு பெற்ற பங்காளிகளாகமாற்றவேண்டும். இரண்டாவது இப்போராட்டத்தினூடாக பெறப்போகும் விடுதலையை முழுமக்களுக்குமான விடுதலையாக உத்தரவாதப்படுத்த வேண்டும்'

இங்கேயுள்ள மிகவும் பிரதானமான விசயம் என்னவென்றால் இவர்கள் இந்த 'முழுமக்களுக்கான விடுதலையாக உத்தரவாதப்படுத்தலை' எவ்வாறு செய்யப் போகிறார்கள் என்பது பற்றியதே. மக்கள் யுத்தத்தின் சரியான நோக்கத்தை விபரிக்க முனைவதாக குறிப்பீடும் இவர்கள் அதன் அடிப்படை நோக்கம் என்று கூறி, மக்கள் யுத்தம் நிறைவு செய்ய வேண்டிய இரண்டு 'உப' விசயங்களைப்பற்றிப் பேசுகிறார்கள். இதன் காரணமாக, பிரதானமான அடிப்படை விசயம் அடிபட்டுப்போக, இந்த இரண்டாம் பட்ச விசயங்களையும், இவர்கள் எவ்வாறு சாதிக்கப் போகிறார்கள் என்பதற்கான விளக்கமும், இல்லாமல் போய்விடுகிறது. அதாவது, முழுமக்களையும் ஸ்தாபனப்படுத்தி அரசியலுணர்வு பெற்ற பங்காளிகளாக்குதல் என்பதன் தெளிவான அர்த்தம் என்ன? அரசியலுணர்வு என்பது எது? என்ற பிரச்சினையும் 'எந்த விதமான விடையுமற்று நிற்கின்றன.

இதற்கான காரணம் மிகவும் இலகுவானது. உண்மையில் மக்கள் யுத்தம் என்பது ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்கான யுத்தம்; ஏகாதிபத்தியங்களிடமிருந்தும் உள்நாட்டு ஆளும் வர்க்கங்களிடமிருந்து பரந்துபட்ட மக்கள் தம்மை விடுவித்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு நடத்தும் புரட்சிகர யுத்தம். இந்தப் பிற்போக்காளர்களின் சுரண்டவாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும் அரசியந்திரத்தை தகர்த்தெறிய பரந்துபட்ட மக்கள் நடத்தும் விட்டுக் கொடுக்காத யுத்தம். அதாவது அரசதிகாரத்தை பரந்துபட்ட மக்கள் பிற்போக்காளரிடமிருந்து பறித்து தகர்த்து,

(4- ம் பக்கம் பார்க்க)

### பெண்களும் வயோதிபர்களும் தாக்கப்பட்டனர்!
### ஊர்வலத்தின் மீது
### துப்பாக்கி ஏந்திய இளைஞர் பாய்ச்சல்!

## மண்டான் கிராமத்து மக்கள் மீது

# விடுதலை இயக்கத்தின் காடைத்தனம்!

மண்டான் கிராமத்தில் வாழும் கூலி விவசாயிகள் தங்கள் கிராமத்தில் தரிசாக இருந்த முடிக்குரிய காணி ஒன்றை செப்பனிட்டு தமது கிராமத்தில் நிலமற்றிருந்த சில குடும்பங்களுக்கு வழங்கினர். இந்தக் காணியை தமக்கு சொந்தம் கொண்டாடி நிலவுடமையாளர் ஒருவர், தனது தயாரிக்கப்பட்ட 'கள்ள உறுதி'களை பயன்படுத்தி இதை தடுக்க முயன்றார், மண்டான் கூலி விவசாயிகளின் குடிசைகளை பிடுங்கி எறிய முயன்று அவர் தோல்வி கண்டார். இதன் பின் ஒரு விடுதலை 'இயக்கத்திடம் முறையிட்டு தனது நிலத்தை' பறித்துத் தரும்படி கேட்டார்.

தமிழீழத்தில் பொலிஸ் படை இல்லாத குறையை 'ஆயுதமேந்திய விடுதலை வீரர்களான இவர்கள் சமீபகாலமாக நிவர்த்தித்து வருவது தெரிந்ததே. குற்றங்களை விசாரிக்கும் நீதிபதிகளாக தம்மை கருதிக் கொண்டு இவர்கள் இந்த குடிசை அமைத்துக்கொண்டிருந்த கூலி விவசாயிகளை தாக்கியுள்ளார்கள். நியாயம் கேட்கவந்த பெண்களை தூஷண வார்த்தைகளால் ஏசி, துப்பாக்கியினால் அடித்து விரட்டினார்கள்; பின் சிலரை கைது செய்து தமது முகாமுக்கு எடுத்துச் சென்றார்கள்.

இவர்களை விடுவிக்க கோரி உடனடியாக மண்டான் மக்கள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடாத்தினார்கள். உங்கள் கையில் தமிழீழம் வந்தால் எம்மை அழித்துவிடுவீர்கள்! உங்கள் சோஷலிசம்' எமக்கு வேண்டாம் 'எமது பிள்ளைகளை 'திருப்பி தாருங்கள்' என்று கோஷித்தவண்ணம் சுமார் 200 பேர்கள் நடாத்திய இந்த ஊர்வலத்தின்மீது குஞ்சர் கடை'யில் வைத்து இந்த 'விடுதலை இயக்க' தோழர்கள் துப்பாக்கிகள் சகிதம் பாய்ந்தார்கள்.

நண்பகல் வெயிலில் கொதிக்கும் தார்வீதியில் உருட்டி உருட்டி இந்த ஊர்வலத்தினர் அடிக்கப்பட்டனர். பெண்களை விடுத்து ஆண்களை கைது செய்து எடுத்துச் சென்றார்கள். ஊர்வலத்தில் போன ஏனையோர் அவ்விடத்திலேயே தங்கிவிட்டனர்.

மண்டான் மக்களின் உறுதியான எதிர்ப்பை சமாளிக்க முடியாது பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டார்கள் பலத்த காயங்களுடன் பல இளைஞர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உடமை வாக்கங்களின் கூலிப்படையாகவும் ஒடுக்கப்பட்ட பாட்டாளிவர்க்கத்திற்குஎதிராகவும் செயல்பட்டு வரும் இந்த 'இயக்கங்களின்'சோசலிச வெற்று வார்த்தையை நம்பி ஏமாற இனியும் மக்கள்' தயாராக இல்லை என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும்.

பிற்போக்கு உடமை வாக்கங்களின் அரசை நிர்மூலமாக்கி, தொழிலாள விவசாயிகள் அரசாக தமிழீழ அரசை நிறுவுவதற்கான - புதியஜனநாயகப் புரட்சியை நோக்கி அணியாக திரள்வதன் அவசியம் இன்று வெட்ட வெளிச்சமாகி விட்டது."

சோசலிச தமிழீழத்தை அதன் 'சரியான அர்த்தத்துடன்' நிறுவுவதற்காக தொழிலாள விவசாயிகள் தலைமையில் அனைத்து மக்களையும் அணிதிரளுமாறு அறைகூவி அழைக்கிறோம்!

## அரசதிகாரமின்றி...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

படுத்த முடியாத' என்ற விசயம், இதை மிகவும் தெளிவாக்குகிறது. வர்க்கங்களை தனித்தனியே ஸ்தாபனப்படுத்தும் வேலையை யார் செய்ய முடியும் பூஷ்வா வர்க்கம் தனது நலன்களைப் பேணும் நோக்கில் உலகை நடை போடச் செய்ய இடையறாது முயன்றுவருகிறது. பாட்டாளி வர்க்கத்தையும் கூட அதுபயன்படுத்த முனைகிறது. வர்க்கத்தை இன்னொரு வர்க்கம் பயன்படுத்தலாகாது என்பது, அடிப்படையி பாட்டாளி வர்க்கம் ஏனைய வர்க்கங்களை தனது மேலாண்மைக்கு கீழ்ப்படுத்துதலையே எதிர்க்கும். இது முதலாளிய வர்க்கததிற்கு சாதகமாகவே அமையும் வர்க்கங்களிடையே சமத்துவமான ஒற்றுமையை எதிர்பார்க்கும் அப்பாவித்தனமான கற்பனாவாதிகளான இவர்களின் சிறுபிள்ளைத்தனமான 'புதியதத்துவம்' மிகவும் கேலிக்கிடமான விதத்தில் 'சமரசவாதத்தில் கொண்டு போய் தள்ளிவிடும்.

இங்கு நிலவுகிற உடமை வர்க்கங்களின் அதிகாரத்தை உடைத்து பாட்டாளிவர்க்கம் தனது அதிகாரத்தை நிறுவ பரந்துபட்ட மக்களை தன்கீழ் அணிதிரட்டுதலை இந்த 'புதிய தத்துவம்' எதிர்த்து நிற்கும் தன்மை கொண்டதாக அமைந்துள்ளது. எல்லா வர்க்கங்களுக்குமான பொதுவான மார்க்கத்தின் கீழ் ஐக்கியப்படுதல் என்பது அவை தனித்தனி தமது 'சுயத்தை' பேணுகையில் (ஆகா! என்னே கற்பனை) எவ்வாறு சாத்தியப்படும் என்பது தான் புரியவில்லை.

உண்மையில் இங்கு இன்றுள்ள சூழல் தேசிய விடுதலைக்கான சூழல். இங்குள்ள உடமை வர்க்கங்கள், இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை தமது அதிகாரத்தின்கீழ் கொண்டு வர முயல்கின்றன. பாட்டாளி வர்க்கமும் இன்று பெரிதும் இவர்கள் பின்னாலேயே இழுபட்டுச் செல்கிறது. வர்க்க உணர்வற்று சிதறிக் கூலிப்படையாக இயங்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு வர்க்க உணர்வூட்டி, அதை பலமான அணியாக திரட்டுவதும், அதன் தலைமையில் பரந்துபட்ட அனைத்து (தேசியப்பிரிவினரான) மக்களையும் அணிதிரட்டுவதன் மூலமாக தேசிய விடுதலைப் போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியாக நடைமுறைப்படுத்த பரந்துபட்ட மக்களது யுத்தத்தை நடத்துவதுமே இன்றுள்ள பிரதான கடமையாகும். அதுவே பாட்டாளிவர்க்கத்தின் கடமையுமாகும்.

முடிவாக, அனைத்து உடமை வர்க்கங்களுக்கும் மிகவும் உவப்பூட்டக் கூடியதும் தம்மை சாதுரியமாக மறைத்துக் கொண்டு தமது தலன்களை நிறுவவும் அவற்றிற்கு பயன்தரும் விதத்தில் அமைந்துள்ள இச்சிறு பிரசுரத்தினை, பாசறை வெளியீட்டாளர் மறுபரிசீலனைக் குட்படுத்துவார்கள் என நம்புகிறோம்.

## இரணைமடு.....

(1ம்-பக்கத்தொடர்ச்சி)

மீது கடன் பளுவைக் கூட்டுவதுடன், வறுமையிலும், பஞ்சத்திலும் தள்ளி விடுகிறது. காலப்போக்கில் தமது நிலத்தை விற்றுவிட்டு கூலி விவசாயிகளாக மாறவேண்டிய நிலைக்கு சரிந்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடத்திய அரசு கணக்கெடுப்பின்படி 27,000 பேர் வரையில் மலையகத்துக் கூலி விவசாயிகளாக உள்ளதாக தெரிய வந்துள்ளது. இவர்கள் ஏறத்தாள 50% ஆவர். இந்த கூலி விவசாயிகள் தமது வேலை வாய்ப்பை இழந்து போவதுடன், கொடிய பஞ்சத்திற்கும் ஆளாகும் கொடுமை ஏற்படவுள்ளது. இவர்கள் தொடர்ந்தும் கூலிவேலையிலேயே தங்கிவாழமுடியாதென்றும் தமது வாழ்வை மேம்படுத்த உற்பத்திச்சாதனமான நிலம் கொஞ்சமேனும் தேவையென கோரி வருகின்றனர். தமது தலைமையை ஏனைய வர்க்கங்கள் மீது நிறுவவும், விவசாயப் புரட்சியை, முன்னெடுக்க வறிய விவசாயிகளையும், மத்தியதர விவசாயிகளையும் திரட்ட வேண்டியதன் அவசியத்தை புரிந்து கொண்டும் உள்ளனர்.

நில முதலைகளினதும், அதிகார முதலாளி வர்க்கத்தினதும் சுரண்டல் கொடுமைகளையும், அடக்குமுறைகளையும் எதிர்த்து மக்கள் மனங்களில்நெருப்பு வளர்ந்து வருகின்றது. தண்ணீர்ப்பங்கு மோசடியை அடுத்து ஏற்படவுள்ள கொடிய பஞ்சத்தை தடுக்க எல்லா மக்களும் தமது ஒன்றுபட்ட எதிர்ப்பைக் காட்ட அணிதிரள வேண்டுகிறோம்.

## ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்கு முறைக்கு...

(3-ம் பக்கத்தொடர்சி)

தெடுப்பதுமாகும். ஸ்ரீலங்கா தரகு முதலாளிய அரசு ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு வழிகோலும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே இதனை மேற்கொண்டுள்ளது. பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென் கொரியா போன்ற ASEAN அமைப்பைச் சேர்ந்த நாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகள் இவ்வாறு தான் பறிக்கப்பட்டது. அரசு எந்திரம் பன்னாட்டு நிதிநிறுவனங்களுக்குத் தேசத்தை விற்கும்போது, தேசத்தில் 'அமைதியும், சமாதானமும்' சட்டரீதியாக நிலை நிறுத்தப்படுவதுஇவ்வழிகளிலாகும். இத்தகைய ஒடுக்கு முறைகளுக்கெதிராக சிங்கள மக்கள் போராடுவது அதிசயமானதல்ல.

இந்த தடைச்சட்டத்திற்கு எதிராக தமிழீழத்திற்கு வெளியிலுள்ள சகல பல்கலைக்கழகங்களின் மாணவர்களும் போர்க்குரல் எழுப்பியுள்ளனர். பேராதனை, கொழும்பு, மொரட்டுவ, களனி, வித்தியலங்கார, ருகுணு ஆகிய சகல பல்கலைக்கழகங்களின்மாணவர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். அத்தோடு அம்பலாங்கொடை. அம்பாறை, மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த இருநூறு பாடசாலைகளின் மாணவர்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இப்பாடசாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

வங்கி ஊழியர்கள் சங்கம், எச். என். பெர்னான்டோவைத் தலைவராகக் கொண்ட இலங்கை ஆசிரியர்கள் சங்கம்C.T.U.போன்றவை(இவற்றிடம் தொழிற்சங்கவாத போக்கு மேலோங்கி இருப்பினும்கூட) நியாயமான போராட்டங்களை முன்னெடுக்கின்றன.C.T.U. தேசியப் பாதுகாப்பு நிதியைப் பகிஷ்கரிக்க கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய போராட்டங்களுக்கு எம்மாலான சகல ஆதரவுகளையும் வழங்குவோம்.